அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை




கார்த்திகை 2011
ISSN 1837-6460
மலர் 3 இதழ் 11

# கார்த்திகை பூக்களே நலமா?



**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?அங்கே உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**

தூயவர்களே நீங்கள் துயின்ற துயிலும்
இல்லங்கள் இல்லையே...!!!
எங்கே போனீர்கள்?
எங்கள் மனங்களில் நிம்மதி இல்லையே...!!!
அட யார் அழுவது அங்கே?.....
எங்கள் பிள்ளைகள் கண்மூடி துயின்றது
தாய்மண்ணின் மடியில்
அவர்கள் எப்போதும் வாழ்வது எங்களின்

இதயங்களின் அடியில்.....!!!

கடைசித்தமிழன் இறுதிமூச்சு இருக்கும் வரை
எங்கள் கண்மணிகளின் நினைவிருக்கும்.
அவர்களின் கனவும் இருக்கும்.

**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?அங்கே உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**

விதையாய் விதைத்தோம்
விருச்சங்களே நீங்கள் முழைப்பது எப்போது?
கல்லறைகள் ஒவ்வொன்றும் உள்ளே
கனன்றெரியும் தீக்கிடங்குகள்
தொட்டவனை சுட்டெரிக்கும் வேளை வரும்.
எரிமலைகள் வெளியே எரிவதும் இல்லை
தெரிவதுமில்லை.

கல்லறை வந்து கட்டியணைத்து- எங்களின்
கவலைகள் சொல்லதுடிக்குது மனது
வீர வேங்கைகளே உங்களின் விழி திறக்காதா ?
விரைவில் எங்களுக்கு வழி பிறக்காதா?
மாவீரர்களே எங்களின் மனம் கனக்குதே..!!!
மறுபடியும் ஒரு நாள் உயிர்வலிக்குதே..!!!

**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?அங்கே உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**

மணியோசை கேட்டால் மனம் உருகும் துயிலும்
இல்லத்தில் எங்களின் உயிர் கருகும்.
விளக்குகள் எரிக்கையில் எங்களின் விழி
கலங்கும்
விரைவினில் விடியும் என்றே அது சொல்லி
எரியும்.

விழி நீர் ஊற்றி விதைக்கும் போது விம்மி வெடிக்கும் மனது
அந்தக்கணம் எழுத்தில் சொல்ல முடியாத உணர்வு.
வார்த்தைகளால் சொல்ல முடியாத உங்களின் தியாகங்கள்
யாரும் செய்யவே முடியாத உங்களின் யாகங்கள்....!!!
தியாக தீபங்கள் அணைகையில் அடி வயிறு எரியும்
அருகில் இருந்த உங்களுக்கு மட்டும் தான்
அது தெரியும்.
அத்தனை நாளும் தூங்காத உங்கள் விழிகள்...!!
மணியோசை கேட்ட பின்னே அமைதியாய் கண் துயிலும்.
மண்ணில் விடுதலை தீ மூண்டெரியும்
அதில் நிதம் நிதம் உம் நினைவும் சேர்ந்தெரியும்.
கற்பனையே செய்ய முடியாத அற்புதங்கள்
யாரும் செதுக்க முடியாத சிற்பங்கள்.
கல்லறையில் துயிலும் அக்கினிக்குஞ்சுகள்
கருக்கொண்டு கிடக்கும் தமிழீழத்தின் பிஞ்சுகள்.

**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?**
**உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**

வெள்ளை மணல் வெளியில் உங்களின் கால்த்தடம் தெரியும்
விரைவினில் விடிவு வரும் என்று சொல்லியே அது சிரிக்கும்.
கடற்கரைக்காற்றினில் கந்தக வாசம் வரும்
கரும்புலிகளின் நினைவுகளும் அதில் சேர்ந்து வரும்.
தூரத்தில் தெரியும் வானம் சிவக்கும்- அதில்
சிந்திய உங்களின் குருதி இருக்கும்.
வானத்தில் இருந்து வந்து விழும் மழைத்துளியில்- நீங்கள்
சிந்திய வியர்வையின் உப்புக்கரிக்கும்.
பூத்துக்குலுங்கும் கார்த்திகைப்பூக்களில் உங்களின்
புன்னகையும் பூத்திருக்கும்.
மூண்டெரியும் தீபச்சுடரிலே உங்களின்
செம்முகமும் சேர்ந்தெரியும்.
தாயக நினைவுகள் ஆயிரம் வந்தாலும் அட
சத்தியமாய் அத்தனையிலும் நீங்கள் இருப்பீர்கள்.
விடுதலைத்தாயின் செல்லப்பிள்ளைகள்-எங்கள்
வீட்டு முற்றத்தில் வளர்ந்த முல்லைகள்
**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?**
**உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**
காற்றோடு கலந்தாலும்
கடலோடு கரைந்தாலும்
மண்ணோடு புதைந்தாலும்
மாவீரன் சாவதுமில்லை.
மாவீரம் அழிவதுமில்லை.
விடிகின்ற வேளையில் உங்களுக்கு விளக்கெரிப்போம்
எல்லாம் முடிகின்ற போதிலே மீண்டும் உம்மை விதைத்திடுவோம்.
எதுவரினும் உங்களை மறந்திட மாட்டோம்
நீங்கள் நடந்திட்ட பாதையை விட்டு விலத்திட மாட்டோம்.
உறுதியின் உறைவிடங்களே…!!
வீரத்தின் விளை நிலங்களே..!!!
உயிர் தந்த உங்கள் மீது உறுதி…
விரைவினில் விடியும் இரவு…!!!
அன்று வருவோம் உங்களின் காலடியில்
'தீபம் ஏற்றி கண்ணீர் விடுவோம்.
**கார்த்திகை பூக்களே நலமா?**
**கல்லறை தெய்வங்களே சுகமா?**
**எங்கள் ஊர்கள் நலமா?**
**உறவுகள் நலமா?**
**நீங்கள் துயிலும் தாய்மடி நலமா?**



தமிழ்ப்பொடியன் 24.11.2011

***இந்த வெளியீட்டில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கொள்கைகளையோ நோக்கங்களையோ பிரதிபலிப்பனவல்ல. அவை அந்தந்த எழுத்தாளர்களின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகவே இருக்கும்***

# நியு சவுத் வேல்ஸ் மாநில செய்திகள்

## நியு சவுத் வேல்ஸ் மாநில மாநாட்டில் தொழிற்கட்சி இளைஞர்கள் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றினர்:

எமது அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் பிரச்சார முன்னெடுப்பு காரணமாக எமது பிரதிநிதிகள், தொழிற்கட்சி இளைஞர் பிரதிநிதிகளுடன் மாநில மாநாட்டில் பங்குபற்றினர். இம் மகாநாட்டில் ஸ்ரீலங்கா தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நியு சவுத் வேல்ஸ் மாநில. தொழிற்கட்சி இளைஞர்கள் அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் இளைஞர்களுடனும், ஏனைய குழுக்களுடனும் இணைந்து ஸ்ரீலங்கா தொடர்பாக சுயாதீன விசாரணைக்கு ஆதரவாக செயல்பட உள்ளனர்.

## தொழிற் கட்சியின் துணைக் கண்ட நண்பர்கள் குழாம் - தகவல் கருத்தரங்கு

தொழிற் கட்சியின் துணைக் கண்ட நண்பர்கள் குழாம் கடந்த நவம்பர் 4ந் திகதி இராப்போசன விருந்துடனான துணைக் கண்ட தகவல் கருத்தரங்கு ஒன்றினை சட்னி கிராண்ட்வில் ஹிமாலயா உணவகத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். இந் நிகழ்வு மிக பிரமாதமாக அமைந்திருந்தது.

இந் நிகழ்வில் பிரதம மந்திரியின் பாராளுமன்ற செயலாளர் உட்பட முக்கிய மத்திய, மாநில சிரேஷ்ட தொழிற் கட்சி அரசியற் பிரமுகர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய தொழிற் கட்சியின் துணைக் கண்ட நண்பர்கள் குழாம் தவிசாளர் திரு ஹரிஸ் வேல்ஜி அவர்கள், ஸ்ரீலங்காவின் போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை அவசியம் என வலியுறுத்தினார். அத்துடன் இவ் விடயங்கள் தொடர்பாக சர்வதேச போர்க் குற்ற விசாரணை சபை விசாரணை நடாத்த வேண்டுமென துணைக் கண்ட நண்பர்கள் குழாம் நம்புவதாக குறிப்பிட்டார்.

மாநில சட்டமன்ற உறுப்பினர்களான மிசேல் றோலண்ட் - கிறீன்வே, நேதன் றிஸ் - துங்காபீ ஆகிய இருவரும், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு வேளையில் ஸ்ரீலங்கா போர் குற்றங்கள் தொடர்பாக தகவல் மையங்கள் கூடிய முக்கியத்துவ செயதிகள் வெளியிட்டமை பற்றி எடுத்துரைத்தனர்.







# குவீன்ஸ்லாந்து மாநில செய்திகள்

**போல் கீற்றிங் - ரிச்சர்ட் பிட்லர் உடனான உரையாடல் - 2 நவம்பர் 2011:**

பிரிஸ்பன் எழுத்தாளர் விழாவில் திரு போல் கீற்றிங் அவர்கள் தனது புத்தகமான

“ AfterWords – வாந post Prime ஆனைளைவநசயைட Speeches” பற்றி உரையாற்றினார். இந் நிகழ்வின் போது எமது பேரவை பிரதிநிதிகள் போல் கீற்றிங்கை சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது.

**ஆஸி. தொழிற்கட்சி பிரிஸ்பன் வடமண்டல கருத்தரங்கு - 6 நவம்பர் 2011**

மேற்படி கருத்தரங்கில் துணைப் பிரதம மந்திரி மதிதகு வேய்ன் சுவான் பா.உ, செனட்டர் மார்க் பேர்னர் உட்பட மத்திய, மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் எமது பேரவையின் தொழிற்கட்சி அங்கத்த வர்களும் பங்குபற்றினர்.

**சேர்ஜர் குடிவரவு தடுப்புமுகாம் விஜயம் - 11, 13 நவம்பர் 2011:**

ஏமது பேரவை பிரதிநிதிகள் மேற்படி தடுப்புமுகாமுக்கு விஜயம் செய்தனர். வேய்பா தடுப்புமுகாம் இளைஞர்களின் உதவியுடன் இந்துக்களுக்கான பிரார்த்தனை அறை ஒன்று அமைக்கப்பட்டது. குருக்கள் ஒருவர் அங்கு சென்று வந்துள்ளார்.

குடிவரவு திணைக்களத்தின் முக்கிய செயற்பாட்டுக் குழுவின் ஒரு பிரிவாக எமது பேரவை பிரதிநிதிகள் - அமைச்சின் ஆலோசனைக் குழுவினருடன் இத் தடுப்பு முகாமிற்கு விஜயம் மேற்கொண்டனர். இச் சந்தர்ப்பத்தில் இக்குழுவினர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு - தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய கொள்கை மாற்றங்கள் பற்றியும், இணைப்பு விசா வழங்குதல், சமூகத்துடன் கலந்து தடுத்துவைத்தல் போன்றவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

**ஈடோஸ் நிகழ்வு - மதிதகு மைக்கல் கேர்பி**

மேற்படி நிகழ்வில் பங்குபற்றிய எமது பேரவை பிர-திநிதிகள் திரு மைக்கல் கேர்பி

அவர்களை சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. திரு மைக்கல் கேர்பி அவர்கள்

“ பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மறுசீரமைப்பு

உலகலாவிய ஸ்தாபனத்துக்கு இறுதிச் சந்தர்ப்பம்” என்ற நிலைப்பாட்டில்

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு CHOGM – வெற்றி தோல்விகள் குறித்து உரையாடினார்.

ஏபிசி தேசிய வானொலி முக்கிய ஊடகவியலாளர் **போல் பாக்லே** கேள்விப் பதில் நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

அவரது முதல் கேள்வி ஸ்ரீலங்காவும் - போர்க் குற்றங்கள் தொடர்பில் அமைந்திருந்தது.

**கேவின் றட்டுடன் காலைஉணவு நிகழ்வு - 26 நவம்பர் 2011**

திரு ரோய் பிராம்ஸன் அவர்களது “ Looking for the *Light on the Hill*” என்னும் புத்தகத்தின்

வெளியீட்டு நிகழ்வில் அமைச்சர் கெவின் றட் அவர்கள் கலந்துகொண்டார். செனட்டர் மூர் அவர்களின் அழைப்பின் பேரில், எமது பேரவை பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கசிந்துவிடப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கமும் ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் உரையாடப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் குழுவின் அறிக்கை சர்வதேச தரத்துக்கு அமைவாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டார். அத்துடன் உத்தியோக பூர்வமாக அறிக்கை வெளியானதும் தான் அது தொடர்பாக தான் கருத்துக் கூறுவதாக எடுத்துரைத்தார்.

**புதிய உறவுகளுடனான ஒன்று கூடல்:**

எமது பேரவையினர் கடந்த ஒக்டோபர் 23ந் திகத, இங்கு புதிய வரவுகளையும் அவர்களது குடும்பத்தவர்களையும் அழைத்து ஒன்று கூடல் நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். 60 பேர் வரையில் பங்குபற்றினர். அங்கு சிறுவர் முதல் பெரியவர்கள் வரை போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. மதிய போசனத்தினைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. புதிய வரவுகள் தொடர்பான தேவைகளும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

## விக்டோரிய மாநில அவையின் மனிதாபிமான செயற்பாடுகள்

எமது தமிழர் பேரவையின் விக்டோரிய மாநில உறுப்பினர்கள் இங்கு புதிதாக வந்துள்ளோரை டன்டிநோங்கில் சந்தித்தனர். எமது பேரவையினர் இவர்களுக்கு

பல துவிச்சக்கர வண்டிகள், மடிக் கணணிகள், கம்பியூட்டர்கள், புத்தகங்கள், பொம்மைகள் ஆகியனவற்றையும் வழங்கினர்.

எமது பேரவையினரிடம் இவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய உதவிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இவர்கள் தமக்களிக்கப்படும் சுகாதார வசதிகள் குறித்து பெருமிதமடைந்தனர். பல சிறுவர்கள் தமிழ்ப் பாடசாலைக்கு சென்று வருவதற்கு பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இவர்கள் தமக்கு வேண்டிய பல சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக எமது பேரவையினர் பல தொடர்புகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர்.

# 2011 மாவீரர் தினம்: தேசிய எழுச்சி நாள்

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய எனது தமிழ் ஈழ சகோதரங்களே! என்னும் சில தினங்களில் ஈழத் தமிழர் அனைவரினாலும் மதிப்புடன் நினைவுகூரப்படும் மாவீரர் தினத்தை எமது தேசிய எழுச்சி நாளாக அனுட்டிக்கிறோம்.

**தேசிய வழிபாடு**

உயிரை அர்ப்பணித்தவர்களை நினைவுகூருதல் எப்படி எழுச்சி நாளாகும்? எமது நீண்ட விடுதலைப் போராட்டத்தில் "சாவிலும் வாழ்வோம், வீழந்தாலும் எழுவோம்" எனத் திடம் கொணடிருக்கிறோம் என்பதுதான்.. ஆகையினால்தான் மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் உயிர் நீர்த்தவர்களை நன்றியுணர்வுடனும் வணக்கத்துடனும் நினைவு கூர்வதுடன், அந் நிகழ்வை ஊற்றாகக்கொணடு மாவீரரின் வீரத் தியாகத்தின் உணர்வை உள்வாங்கி, நாமும் வீரத் தியாகத்துடன் எழுச்சி பெற்று போராட எம்மை தயார் செய்கின்றோம். இத் தினத்திற்குரிய புனிதத்துவத்தை அல்லது தனித்துவத்தை மாசு படுத்தாது, அதை எமது இனத்தின் "தேசிய வழிபாடு" போல் மதித்து நடந்து கொள்ளுமாறு எல்லோரையும் – ஒழுங்கு படுத்தும் பணியாளர்களையும் பங்கு பற்றும் பொது மக்களையும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

இப் புனித நிகழ்வை மாசு படுத்தும் அல்லத கொச்சைப் படுத்தும் சில்லறைச் சண்டை சச்சரவுகளையும் போட்டி பொறாமைகளையும் தவிர்த்து நடக்க இதய சுத்தியுடன் முயற்சியுங்கள். இந்த ஆண்டு எம்மை எட்டும் தகவல்கள் மிக மிக மன வருத்தத்தைக் கொடுக்கின்றன.

**முடிந்ந முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்**

இந்த நாளின் நிகழ்வுகளை முள்ளிவாய்க்காலுக்கு முன்பு செய்தது போல் எல்லாம் செய்ய முடியாததையிட்டு நாம் எல்லோரும் வருந்துகின்றோம். ஆனால் இன்றைய சூழலுக்கும், தேவைக்கும், தற்போதைய சவால்களுக்கும் உகந்ததாக இந்நாளை அனுட்டிப்பதே நீதியும் பொருத்தமுமானது. அதாவது மக்களுக்கு தாயகம் மீட்க தன்னுயிர் நீர்த்த மாவீரரின் ஆழ்ந்த அர்ப்பணிப்பை நினைவு படுத்தி, இன்றைய சூழலில் நாம் எதிர் கொள்ளும் சவால்களையும் துன்பங்களையும் எதிர்த்து போராட தேவையான மக்கள் சக்தியைப் பெருக்க அவர்களுடைய ஆதரவையும ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

எமது போராட்டத்தின் புதிய பரிமாணத்தையும சூழலையும் அதன் வெவ்வேறு சவால்களையும் தேவைகளையும் இன்னும் நாங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. முள்ளிவாய்க்கால் முடிந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும், போராட்டத்தின் புதிய கட்டத்தை நடத்த வேண்டிய புலம்பெயர் மக்கள் அதிகமானோர் இன்னும் சரியாக தம்முடைய பங்கையும் பணிகளையும் விளங்கவில்லை. இத் தெளிவற்ற நிலையே இன்று எம் மத்தியில் இருக்கும் பிரச்சினைகள் பிரிவினைகள் பலவற்றிற்கு காரணமாயிருக்கிறது.

முள்ளிவாய்க்காலின் முன் போரும் போராட்டமும் வன்னித் தலைமைத்துவத்தின் கீழ் ஈழத்தில் நடந்தது. புலம்பெயர்ந்த மக்கள் உணர்விலும் உதவியிலும் ஒன்றித்திருந்தனர். ஆனால் இன்று வன்னித் தலைமைத்துவமும் இல்லை, அங்கு

ஆயதப் போருமில்லை, அங்கு எஞ்சி இருக்கும் எழுந்து நின்று உரியமுறையில் போராட சக்தியுமில்லை வசதியுமில்லை. இந் நிலையில் புலம் பெயர்ந்த மக்கள் போர் முடிந்தாலும் போராட்டம் தொடரும், வீழ்ந்தாலும் எழுவோம், சாவிலும் வாழ்வோம் என்பதற்கு ஒப்ப போராட்டத்தை தொடருகின்றோம்.

**போராட்டத்தின் கட்டமைப்புகள்**

இப் புதிய கட்டத்திற்கு இலட்சியத் தெளிவு ஏற்படுத்த வட்டுக் கொட்டை தீர்மானத்தை மீளவும் உறுதிப் படுத்தினோம்.இவ்விலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல ஏதுவாக ஒரு புதிய முயற்சியை "நாடு கடந்த அரசாங்கம்" என்ற கட்டமைப்பில் முயலுகின்றோம். எமது போராட்டத்தின் சர்வதேச சவால்களை சந்திக்கவும் செயல்படவும், ஏற்கனவே நாடுகளின் மட்டத்தில் செயற்பட்டு வந்த அமைப்புகளை இணைத்து, உலகத் தமிழர் பேரவையை ஆரம்பித்தோம். ஈழத்தில் எஞ்சியிருக்கும் எமது உறவுகளையும் அவர்களின் தேவைகள் உரிமைகளை பிரதித்துவப் படுத்தும் ,,"தமிழ் தேசியக் கூட்டமைப்பு" உடனும் பொருத்தமான உறவையும் தொடர்புகளையும் பேணி வருகின்றோம். இப்படி போராட்டத்தில் இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் சர்வ தேசத்திடமிருந்தும் வரும் புதிய சவால்கயைும் பிரச்சினைகளையும் சந்தித்து செயற்படுவதில் ஈடு பட்டுள்ளனர்.

இதே வேளையில் அந்தந்த நாடுகளில் இயங்கும அமைப்புகள் மக்களை, விசேடமாக இழையரை, ஒன்றிணைத்து, அவர்கள் சார்பில் அந்தந்த அரசாங்கங்களுடனும் அங்கேயுள்ள அரசுசார்பற்ற நிறுவனங்களுடனும் எமக்கு சார்பான பரப்புரைகளையும் பரிந்துரைகளையும் செய்ய முயலுகின்றனர்.. இது போராட்டத்தின் ஒரு முக்கிய இன்றியமையாத பகுதி.

**நிகழ்ச்சிகள் எமக்குள், போராட்டம் வெளி சக்திகள் அமைப்புகளுடன்**

மக்கள் மத்தியில் நடக்கும் நிகழ்ச்சிகள் மக்கள்–சக்தியை பெருக்குவதற்கு இன்றியமையாதவை. ஆனால் அவைகளைப் போராட்டமென்றாற் போல் அவைகளிலே முழுக் கவனத்தையும் செலுத்தக் கூடாது. மனிதனுக்கு சாப்பிடுவது அல்லது சக்தி திரட்டுவது முக்கியம். ஆனால் அது வாழ்வாக அமைய முடியாது. செய்ய வேண்டிய பணியாக அமைய முடியாது.சக்தி திரட்டும் நிகழ்வுகளையும் போராடவேண்டிய சக்தி–அமைப்புகளையும் சரியாக இனங்கண்டு கொள்ளவேணடும்.

துரதிஸ்டவிதமாக இன்று சிலர் நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் அமைப்புகளையும் மாத்திரம் மையப் படுத்தி நடக்கின்றனர். நாம் இலட்சியத்தை மையப்படுததி அமைப்களையும் தனி நபர்களையும் இலட்சியத்தின் பணியாளர்களாக நடந்து கொள்வோமாயிருந்தால் நமது போராட்டம் வேகத்திலும் வீரத்திலும் முன்னேறும்.

எமது விடுதலைப் போராட்டத்தின் புதிய கட்டத்தின் தன்மையையும் சவால்களையும் உண்மையாக உணர்ந்து மும்முரமாகவும் முழு வீச்சுடனும் செயல்பட வேண்டிய நேரமிது.

ஈழத்தில் சிங்கள அரசாங்கம் இரவு பகலாக எம் மண்ணையும் மக்களையும் அளித்துக் கொண்டு, வெளி நாடுகளில் பொய்பிரசாரத்துடன் எமக்கெதிரான போரை மும்முரமாக விஸ்தரிக்கும் தருணத்தில் புலம் பெயர்ந்த மக்கள் முன்பொருபொழுதும் இல்லாத வகையில் போராட வேண்டிய நேரம் இது. தனித்தனி நாடுகள் ரீதியிலும் சர்வதேச ரீதியிலும்போராட நாம் எல்லோரும் அழைக்கப் படுகின்றோம்.

ஆகையினால், அன்பானவர்களே, தளராத இலட்சிய உறுதியுடனும், தெளிவான பார்வையுடனும், ஆளமான அர்ப்பணிப்புடனும், பொருத்தமான பங்களிப்பைச் செய்ய உங்களை பணிவுடன் அழைக்கின்றோம்.

பணியாளன் எஸ். யே. இம்மானுவேல், யேர்மனி, 21.11.2011

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

**newsletter@australiantamilcongress.com**

பொறுப்பு **மறுப்பு**

இந்த வெளியீட்டில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கொள்கைகளையோ நோக்கங்களையோ பிரதிபலிப்பனவல்ல. அவை அந்தந்த எழுத்தாளர்களின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகவே இருக்கும்.

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”